http://www.maalaimalar.com Regd. No. CB/026/2024-2026 RNI. No. 30446/77

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

கோவை 24-1-2025 (வெள்ளிக்கிழமை) 8 பக்கம் ₹ 5 ★★★ | மலர் 48 இதழ் 40

COIMBATORE 24-1-2025 (FRIDAY) 8 PAGES ₹5 | VOL: 48 ISSUE: 40




இ.எஸ்.ஐ. சார்பில் தொழிலாளர் குடும்பத்துக்கு உதவித்தொகைக்கான காசோலை வழங்கப்பட்ட காட்சி.

### இ.எஸ்.ஐ. சார்பில்

## பணியின் போது உயிரிழந்த தொழிலாளர் குடும்பத்துக்கு உதவித்தொகை

கோவை, ஜன.24—

தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

### ஓய்வூதியம்

பல்வேறு பணப் பயன்களின் ஒரு அங்கமாக நீண்ட கால உதவித்தொகை (ஓய்வூதியம்) பயனீட்டாளர்களுக்கும், அவர் தம் சார்ந்தோருக்கும் வழங்கப்படுகிறது. இவ்வாறான நிரந்தர உடல் ஊன உதவித்தொகை மற்றும் சார்ந்தோருக்கான உதவித்தொகை பணியில் சேர்ந்த முதல் நாளில் இருந்தே வழங்கப்படுகிறது.

இந்த பண உதவிகள் காப்பீட்டாளர் சார்ந்த கிளை அலுவலக மேலாளரின் முயற்சியால் குறைந்த கால அளவில் விசாரிக்கப்பட்டு உதவித்தொகை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

### 3 பேர் குடும்பத்துக்கு உதவி

கோவை டாடாபாத்தில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ. கணபதி கிளை அலுவலகத்தில் மூன்று பயனீட்டாளர்களின் சார்ந்தோருக்கான முதல்கட்ட உதவித்தொகையை அதன் மேலாளர் ஹெலன் தீபா மற்றும் உதவியாளர்கள் தனிஷ் ஆபிரகாம், நாகலட்சுமி, ரதீஷ் நாயர் ஆகியோர் வழங்கினர்.

1. கோவை கணபதி பகுதியில் அமைந்துள்ள கேலக்சி செக்யூரிட்டி நிறுவனத்தில் செக்யூரிட்டியாக பணிபுரிந்து பணியின் போது மாரடைப்பு ஏற்பட்டு மறைந்த சண்முகசுந்தரம் குடும்பத்திற்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.19 ஆயிரத்து 290 நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவை தொகையான ரூ.1 லட்சத்து 74 ஆயிரத்து 256 வழங்கப்பட்டது.

2. கோவை கணபதி பகுதியில் சிவராஜ் காண்டிராக்டர் கீழ் பணிபுரிந்து பாதாள சாக்கடை கட்டமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது மண் சரிந்து விழுந்து உயிரிழந்த கோவிந்தன் குடும்பத்திற்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.8,310 நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவை தொகையான ரூ.55 ஆயிரத்து 127 வழங்கப்பட்டது.

3. கோவை கணபதி பகுதியில் ரூட்ஸ் நிறுவனத்தில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து பணியின்போது தவறி கீழே விழுந்து உயிரிழந்த சரவணக்குமாரின் குடும்பத்திற்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.16 ஆயிரத்து 50 நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவைத்தொகையான ரூ.65 ஆயிரத்து 272 வழங்கப்பட்டது.



### கோவை மாநகர் மாவட்ட

## இந்து முன்னணி பொதுக்குழு கூட்டம்

கோவை, ஜன.24—

கோவை மாநகர் மாவட்ட இந்து முன்னணி பொதுக்குழு குஜராத் சமாஜ் பவனில் நடந்தது. மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் தசரதன் முன்னிலை வகித்தார்.

மாநில பொதுச்செயலாளர் கிஷோர்குமார் சிறப்புரையாற்றினார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் சதீஷ், கோட்ட பொது செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட பொதுச் செயலாளர் ஜெய்சங்கர், செய்தி தொடர்பாளர் தனபால், மாவட்ட செயலாளர்கள் ஆறுச்சாமி, ஆனந்த், மகேஸ்வரன் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் பேசும்போது:—இந்து முன்னணியின் மாநில மாநாடு வருகிற ஜூன் 8—ந் தேதி மதுரையில் பிரம்மாண்டமாக நடைபெற இருக்கிறது.10 லட்சத்திற்கும் மேற்பட்ட இந்துக்கள் மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர். வருகிற 11—ம் தேதி இந்துக்களின் புனித திருவிழாவான தைப்பூசம் விழாவிற்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் அரசு செய்து தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் என்றார்.